ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பள்ளப்பட்டி

ஏழாம் வகுப்பு அறிவியல் பருவம்-3 அலகு-1 ஒளியியல்

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (5 X 1 = 5)

1. பின்வருவனவற்றில் எது பகுதி ஒளி ஊடுருவும் பொருள்?
   அ. கண்ணாடி ஆ. மரம் இ. நீர் ஈ. மேகம்
2. ______________________ பரப்பு ஒளியை எதிரொளிக்கிறது.
   அ. நீர் ஆ. குறுந்தகடு இ. கண்ணாடி ஈ. கல்
3. கீழ்க்காணும் எப்பொருள், ஒளியை நன்கு எதிரொளிக்கும்?
   அ. பிளாஸ்டிக் தட்டு ஆ. சமதள ஆடி இ. சுவர் ஈ. காகிதம்
4. ஒளி என்பது ஒரு வகை ____________________.
   அ. பொருள் ஆ. ஆற்றல் இ. ஊடகம் ஈ. துகள்
5. ஆடியில் படும் ஒளியானது ________________.
   அ. ஊடுருவிச் செல்கிறது ஆ. எதிரொளிப்பு அடைகிறது
   இ. உட்கவரப்படுகிறது ஈ. விலகலடைகிறது

II. கோடிட்ட இடங்களை நிரப்புக. (5 X 1 = 5)

1. சூரிய ஒளியானது ______________ வண்ணங்களின் கலவை ஆகும்.
2. ஒரு சமதள ஆடியானது உருவாக்கும் பிம்பம் _______________ ஆகும்.
3. சொரசொரப்பான பரப்பின் மேல் __________________ எதிரொளிப்பு நடைபெறுகிறது.
4. சந்திரன், சூரியனிடமிருந்து ஒளிக்கதிர்களை _____________ செய்கிறது.
5. ஒரு வெள்ளொளி ஆனது, ஏழு வண்ணங்களாகப் பிரிகையடையும் நிகழ்வு ___________________ எனப்படும்.

விடைகள்:

நிறப்பிரிகை பல எதிரொளிக்க

ஒழுங்கற்ற நேரான மாயப்பிம்பம்

III. பொருத்துக (5 X 1 = 5)

| | | |
|---|---|---|
| 1. மின்மினிப்பூச்சி | - | முதன்மை ஒளிமூலம் |
| 2. ஏழு வண்ணங்கள் | - | ஒளிராப் பொருள் |
| 3. நிலா | - | ஒளிரும் பொருள் |
| 4. சமதள ஆடி | - | நிறப்பட்டை |
| 5. சூரியன் | - | பெரிஸ்கோப் |

LIVEWORKSHEETS

IV. <u>பின்வரும் கூற்றுகள் சரியா? தவறா? என எழுதுக</u> (5 X 1 = 5)

1. சமதள ஆடி, ஒளி ஊடுருவாத ஒரு பொருள் ஆகும்.
2. புத்தகத்தின் மேற்பரப்பு, ஒளியை எதிரொளிப்பதால் புத்தகத்தை நாம் காண முடிகிறது.
3. ஒரு பொருளின் நிழல், பொருள் இருக்கும் அதே பக்கத்தில் அமையும்.
4. ஊசித்துளைக் காமிராவில் தோன்றும் பிம்பத்தின் அளவும், பொருளின் அளவும் சமம்.
5. சூரிய ஒளியானது, நீர்த்துளிகளின் மூலம் நிறப்பிரிகை அடைந்து வானவில் தோன்றுகிறது.

LIVEWORKSHEETS